வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 21.3.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஜனநாயக நடைமுறைகளை குலைக்கும் வகையிலான பொய்த் தகவல்கள் தேர்தல் காலத்தில் பரவாமல் தடுக்க, தேர்தல் ஆணையம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது

தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமனம் பற்றிய புதிய சட்டத்தை நிறுத்தி வைக்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஜார்கண்ட் மற்றும் தெலங்கானா ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக, நாளை, கூடுதல் பொறுப்பேற்கிறார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் இன்று, சுயேட்சை வேட்பாளர் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

தவறான தகவல்

ஜனநாயக நடைமுறைகளை குலைக்கும் வகையிலான பொய்த் தகவல்கள் தேர்தல் காலத்தில் வேண்டுமென்றே பரப்பப்படுவதை தடுக்க, தேர்தல் ஆணையம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அரசியல் கட்சிகள், எந்த ஒரு தகவலையும் பெரிது படுத்தும் முன்பாக, ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், தவறான தகவல்களை ஒருபோதும் மக்களிடையே பரப்பக் கூடாது என்றும் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் சமூக ஊடகங்களில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் மக்களிடையே பிரிவினையை பரப்பாமல் ஒற்றுமை உணர்வை பரப்பும் வகையில் செயல்பட வேண்டுமென்றும் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது. வெறுப்பை உமிழும் பேச்சுக்களையும், ஜாதி-மத உணர்வுகளை தேர்தல் ஆதாயத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் போக்கையும் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் நடைமுறைகளில் எதிர்மறைத் தாக்கம் ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்கள் வெளியானால் நோடல் அதிகாரிகள் உடனுக்குடன் அதை நீக்குவார்கள் என்றும், போலிச் செய்திகள் மற்றும் தகவறான தகவல்களை பரப்புவோர், சட்டப்படியான கடும் விளைவுகளை சந்திக்க நேரும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

*விக்சித் பாரத்*

**வாட்ஸ் அப்** மூலம் பொது மக்களுக்கு **விக்சித் பாரத் குறுஞ்செய்தி** அனுப்புவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளுமாறு தேர்தல் ஆணையம், மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகத்திற்கு அறிவுறுத்தி

உள்ளது. பொது தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும், இத்தகைய குறுஞ்செய்திகள் வந்து கொண்டிருப்பதாக பொது மக்களிடம் இருந்து பல புகார்கள் பெறப்பட்டுள்ளதாக ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளின் அமலாக்கம் தொடங்கும் முன்பாகவே இத்தகைய செய்திகளை தாங்கள் அனுப்பி விட்ட போதிலும் நெட்வொர்க் பிரச்சனை காரணமாக இச்செய்திகள் சற்று தாமதமாக பொது மக்களை சென்றடைந்து இருக்கலாம் என்று, அமைச்சகம், ஆணையத்திடம் தெரிவித்துள்ளது.

*சந்திர சூட்*

மாற்றுத் திறனாளிகள் மட்டுமின்றி, மூத்த குடிமக்கள், கருவுற்ற தாய்மார்கள் உட்பட சிறப்புத் தேவை உள்ள அனைவருமே, உச்சநீதிமன்றத்தை எளிதில் அணுக ஏதுவாக நீதிமன்றத்தில் அமைக்கப் பட்டுள்ள உதவி மையத்தை, தலைமை நீதிபதி திரு சந்திர சூட் இன்று திறந்து வைத்தார். சிறப்பு தேவை உள்ள அனைவருக்கும், தேவையான எல்லா வசதிகளையும், உச்சநீதிமன்றத்தில் உருவாக்கித் தர வேண்டுமென நீதிபதி திரு ரவீந்திர பட் தலைமையிலான கமிட்டி கொடுத்த அறிக்கை அடிப்படையில், இந்த உதவி மையம் அமைக்கப் பட்டுள்ளது.

*நியமனம்-நீதிமன்றம்*

தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமனம் பற்றிய புதிய சட்டத்தை நிறுத்தி வைக்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. மக்களவை தேர்தல் விரைவில் நடைபெறும் நிலையில் இந்த சட்டத்தை நிறுத்தி வைக்க இயலாது என்று நீதிபதிகள் திரு சஞ்சீவ் கன்னா, திரு தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று இதுபற்றிய மனுக்கள் மீதான விசாரணையின் போது கூறியது. தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர் நியமனத்திற்கான தெரிவுக் குழுவில், யார் யார் இடம் பெற வேண்டுமென, அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பில் எதுவும் குறிப்பிடப் படவில்லை என்றும், அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட 2 தேர்தல் ஆணையர்கள் மீது எந்த குற்றுச்சாட்டும் இல்லை என்றும் நீதிபதிகள் கூறினர்.

*உண்மைக் குழு*

மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் கீழ் **உண்மை சரிபார்ப்பு பிரிவை** அமைத்து மத்திய அரசு நேற்று வெளியிட்ட அறிவிக்கையை, இன்று உச்சநீதிமன்றம், நிறுத்தி வைத்துள்ளது. தகவல் தொழில் நுட்ப விதிமுறைகளில் கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கு எதிரான மனுக்கள் மீது மும்பை உயர்நீதிமன்றம் இறுதி முடிவை எடுக்கும் வரை, இந்த இடைக்கால தடை நீடிக்கும் என்று தலைமை நீதிபதி திரு சந்திர சூட் தலைமையிலான அமர்வு

இன்று உத்தரவிட்டது. திருத்தப்பட்ட ஐடி விதிமுறைகளின் கீழ் உண்மை சரிபார்ப்பு பிரிவு அமைக்கும் முடிவிற்கு இடைக்கால தடை விதிக்க மறுப்பு தெரிவித்து கடந்த 11-ஆம் தேதி மும்பை உயர்நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவு செல்லுபடி ஆகாது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உ□க ஏற்பு

அனைத்து இணைய தள சேவைகளிலும் அனைத்து மொழிகளும் ஏற்கப்படுவதை உறுதி படுத்துவதற்கான, Universal Acceptance என்னும் உலக ஏற்புக் கொள்கைப் படி உருவாக்கப்பட்டுள்ள Basha-Net இணைய தளத்தை, மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை செயலர் திரு எஸ் கிருஷ்ணன் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். ஆன்-லைன் சேவைகளை அணுக மொழி ஒரு தடையாக இருக்க கூடாது என்றும், அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் வசதிகளின் நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், இந்த Basha-Net இணைய தளம் முக்கிய நடவடிக்கையாக திகழும் என்றும் அவர் கூறினார். இணைய அடிப்படையிலான அனைத்து தகவல் தொடர்பு சாதனங்களிலும், அனைத்து மொழிகளில் அமைந்த இணைய தள முகவரிகள், மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் தடையின்றி ஏற்கப்படுவதை உறுதி படுத்தும் நோக்கிலான Basha-Net இணைய தளத்தை, மத்திய அரசின் C-DAC

கணிப் பொறி ஆய்வு மையம், தேசிய இன்டர்நெட் இணைய தளத்துடன் இணைந்து உருவாக்கி உள்ளது.

*ராதாகிருஷ்ணன்*

ஜார்கண்ட் மற்றும் தெலங்கானா ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக நாளை, கூடுதல் பொறுப்பேற்கிறார். பதிவு ஏற்பு விழா நாளை மாலை 7.30 மணிக்கு புதுச்சேரி ராஜ்நிவாசில் நடைபெறும் என்று, மாநில அரசின் தலைமைச் செயலர், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் பதவியில் இருந்து, டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இவ்விரு பொறுப்புகளும், ஜார்கண்ட் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணனிடம் கூடுதல் பொறுப்புகளாக ஒப்படைக்கப்பட்டன. திரு சி பி ராதாகிருஷ்ணன், ஐதராபாத் ராஜ்பவனில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தெலங்கானா ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்றார்.

*புதுச்சேரி வேட்பு மனு*

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான, இரண்டாம் நாளான இன்று, சுயேட்சை வேட்பாளர் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்தார். நவசக்தி நகரைச் சேர்ந்த அவரது பெயர் திரு கூத்தன் என்கிற தெய்வநீதி என்று, தேர்தல் நடத்தும் அதிகாரி

அலுவலகம் தெரிவித்துள்ளது. வேட்புமனு தாக்கலின் தொடக்க நாளான நேற்றைய தினம், எவரும் மனு தாக்கல் செய்யவில்லை.

*வேட்பு மனு- விதிமுறை*

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்ய வரும்போது, தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்தை சுற்றி உள்ள 100 மீட்டர் பகுதிக்குள் வேட்பாளர்கள் அதிக பட்சம் 3 வாகனங்களை மட்டுமே கொண்டு வரலாம் என்றும், வேட்பாளர் உட்பட அதிக பட்சம் 5 பேர் மட்டுமே, வேட்பு மனு தாக்கலின் போது, தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-கூட்டம்*

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்கத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், பதற்றமான வாக்குச் சாவடிகளை முன்கூட்டியே கண்டறிந்து, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது குறித்து, மாவட்ட தேர்தல் அதிகாரியும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான திரு குலோத்துங்கன், இன்று காவல்துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட துணை ஆட்சியர் திரு சோமசேகர் அப்பாராவ் கோதாரு, மாவட்ட உதவி ஆட்சியர் திரு யஷ்வந்த் மீனா, முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு நாரா சைதன்யா, காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சவுஜன்யா, மாவட்ட துணைத் தேர்தல் அதிகாரி திரு வினய ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*ஊடக அனுமதி*

புதுச்சேரியில், வானொலி, தொலைக்காட்சி, திரையரங்கம், மற்றும், செய்தி தாளின் மின்னணு பதிப்புகளில், அரசியல் தன்மை உள்ள விளம்பரங்களை வெளியிட விரும்பும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், மற்றும் பிறர், ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் முன் கூட்டியே விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. புதுசாரத்தில், திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சித் துறை வளாகத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள இக்குழுவின் அலுவலகத்தில், விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம், அல்லது, இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பத்துடன், உத்தேச விளம்பரத்தின் 2 மின்னணுப் படிவ நகல்களையும், அதன் சான்றளிக்கப்பட்ட எழுத்து படிவத்தையும்,

இணைத்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மாவட்ட தேர்தல் அதிகாரி திரு குலோத்துங்கன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*அஇஅதிமுக-வேட்பாளர்*

புதுச்சேரி மக்களவை தொகுதிக்கான அஇஅதிமுக-வேட்பாளராக திரு தமிழ்வேந்தன் அறிவிக்கப் பட்டுள்ளார். அஇஅதிமுக பொதுச் செயலர் திரு எடப்பாடி பழனிச்சாமி சென்னையில் இன்று வெளியிட்ட, கட்சியின் இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலில் திரு தமிழ்வேந்தன் பெயர் இடம் பெற்றுள்ளது. இப்பட்டியலின் படி திருவண்ணாமலையில் திரு கலியபெருமாள், கள்ளக்குறிச்சியில் திரு குமரகுரு, மயிலாடுதுறையில் திரு பாபு, ஆகியோர் அஇஅதிமுக வேட்பாளர்களாக போட்டியிடுகிறார்கள்.

*பிஜேபி-காங்கிரஸ்*

காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகள் முடக்கப் பட்டுள்ளதாக இன்று காங்கிரஸ் வெளியிட்டுள்ள குற்றச் சாட்டை, பிஜேபி கடுமையாக விமர்சித்துள்ளது. பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு சம்பீத் பாத்ரா புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தவணை தவறியவர்களை, தவணை தவறியவர்களாகவே நடத்த முடியும் என்றார். முடங்கிப் போனது காங்கிரஸ் கட்சியே தவிர, முடக்கப்பட்டது காங்கிரஸ் கணக்கு அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

மூத்த பிஜேபி தலைவர் திரு ரவிசங்கர் பிரசாத், செய்தியாளர்களிடம் பேசுகையில் திரு ராகுல்காந்தி, திருமதி சோனியாகாந்தி ஆகிய இருவரும் உலக அளவில் இந்திய ஜனநாயகத்தை களங்கப்படுத்தி இருப்பதாக குற்றம் சாட்டினார். நீதிமன்றம், தேர்தல் ஆணையம், மற்றும், ஊடகங்கள் குறித்து தவறாகப் பேசியதற்காக திரு ராகுல்காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

முன்னதாக, காங்கரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, கட்சியின் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி ஆகியோர், செய்தியாளர்களிடம் பேசுகையில், காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகள் முடக்கப் பட்டுள்ளதாக குற்றம் சாட்டினர். அனைவருக்கும் சமமான போட்டிக் களம் இருந்தால் தான், ஜனநாயகத்தை காப்பாற்ற முடியும் என்று, திரு கார்கே கூறினார். மக்களிடம் இருந்து காங்கிரஸ் திரட்டிய நிதி முடக்கப் பட்டுள்ளதாகவும், கட்சி கணக்குகளில் இருந்து பலவந்தமாக பணம் எடுக்கப்படுவதாகவும் திருமதி சோனியாகாந்தி குற்றம் சாட்டினார். இது, இந்திய ஜனநாயகத்தை முடக்குவதற்கு சமம் என்று திரு ராகுல்காந்தி கூறினார்.

*ஸ்டாலின்*

திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் நாளை திருச்சியில் மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரத்தை

தொடக்குகிறார். முதலமைச்சரின் வருகையை ஒட்டி, திருச்சி மாவட்டத்தில் இன்று முதல், வரும் 23-,ஆம் தேதி வரை, டிரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே அஇஅதிமுக பொதுச் செயலர் திரு எடப்பாடி பழனிசாமி, வரும் 24-ஆம் தேதி, திருச்சி நாவலூர் குட்டப்பட்டிலிருந்து தமது தேர்தல் பிரச்சாரத்தை தொடக்குகிறார்.

*மீனவர்*

நெடுந்தீவு மற்றும் மன்னார் கடல் பகுதியல் மீன் பிடித்துக் கொண்டிருந்த 31 ராமேஸ்வரம் மீனவர்களை, இலங்கை கடற்படையினர் கைது செய்து, 5 விசைப் படகுகளையும் பறித்துச் சென்றுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள், மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஜனநாயக நடைமுறைகளை குலைக்கும் வகையிலான பொய்த் தகவல்கள் தேர்தல் காலத்தில் பரவாமல் தடுக்க, தேர்தல் ஆணையம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது

தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமனம் பற்றிய புதிய சட்டத்தை நிறுத்தி வைக்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

ஜார்கண்ட் மற்றும் தெலங்கானா ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக, நாளை, கூடுதல் பொறுப்பேற்கிறார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் இன்று, சுயேட்சை வேட்பாளர் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 21.3.2024/Script/

-----------------------------